மின்னஞ்சல் மூலம்

தமிழ்நாடு பதிவுத்துறைத்தலைவர் நடவடிக்கைகள், சென்னை 28
முன்னிலை: திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப.,

எண்:18849/கே2/2020 நாள்:23.10.2020

பொருள்: பணி - தமிழ்நாடு அமைச்சுப் பணி - இளநிலை உதவியாளர்கள் - நேரடி நியமனம் 2018-19 மற்றும் 2019-20ஆம் ஆண்டுகளுக்குரியது - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் CCSE தொகுதி IV தேர்வின் மூலம் நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது

பார்வை:
1.தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016.
2.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.2503/PSD-1/2020 நாள்.30.05.2020 (உடன் பெறப்பட்ட பட்டியல்).
3.பதிவுத்துறை தலைவர் ஆணை எண்.18849/கே2/2020 நாள்.30.07.2020.
4.சம்பந்தப்பட்ட துணைப் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட பதிவாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணிசேர் விவர அறிக்கைகள்.

*****

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய குழுவால் CCSE தொகுதி IV (2018-19 மற்றும் 2019-20ஆம் ஆண்டுக்கானது) தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பார்வை-2ல் காணும் தேர்வாணையக் கடிதத்தின்படி பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-3ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் ஆணைகளின்படி, இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள, இணைப்பில் காணும் இளநிலை உதவியாளர்களின் பணியை பார்வை-(4)ல் காணும் அறிக்கைகளின் அடிப்படையில் இவர்கள் பணியில் சேர்ந்துள்ள நாளான கலம்-5-ல் காணும் நாள் முதல் வரன்முறை செய்தும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(a)(i)ன்படி, இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தை நிறைவு செய்ய வேண்டும் என தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

2. 2018-2019 மற்றும் 2019-2020 தொகுதி IV நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனுக்களின் விளைவுகளுக்குட்பட்டு இவர்களது பணி வரன்முறை செய்யப்படுகிறது.

3. பார்வை-(2)ல் காணும் தேர்வாணைய கடிதத்துடன் பெறப்பட்ட பட்டியலின் வரிசை எண்.128 மற்றும் வரிசை எண்.144-ல் உள்ள நபர்களைப் பொறுத்து அவர்களது இனச்சான்றின் மெய்த்தன்மை குறித்த அறிக்கை பெறப்பட்ட பின்னரே அவர்களது பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

4. இப்பட்டியலில் கலம்-(1) மற்றும் (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்களுக்கும் முதுநிலைக்கும் தொடர்பில்லை. தேர்வாணையத்திடமிருந்து முதுநிலை விவரம் குறித்து பட்டியல் பெறப்பட்ட பின்னரே இவர்களின் முதுநிலை விவரம் நிர்ணயிக்கப்படும்.

5. இவர்கள் இரண்டாண்டுப் பணிக்காலத்தையும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியையும் நிறைவு செய்த பின்னர், தகுதிகாண்பருவம் நிறைவு செய்வதற்கான கருத்துருவை அனுப்பி வைக்கவும், பணிவரன்முறை / தகுதிகாண் பருவம் துவக்கப்பட்டது தொடர்பாக பணிப்பதிவேட்டில் உரிய குறிப்புகள் மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட துணைப் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்டப் பதிவாளர்கள் கோரப்படுகிறார்கள்.

ஒம்./-23.10.2020
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

31/10/2020
மாவட்ட பதிவாளர்
31.10.20

பெறுநர்:
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்.
(சம்பந்தப்பட்ட துணைப் பதிவுத்துறை தலைவர்கள்/
மாவட்டப் பதிவாளர்கள் மூலம்)

நகல்:
1. சம்பந்தப்பட்ட துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்/
   மாவட்டப் பதிவாளர்கள்.
2. முக்கிய ஆணைக் கோப்பு / தனிநகல்-1.

| | | | | |
|---|---|---|---|---|
| 38 | 40 | M.காவ்யா | கோயம்புத்தூர் | 06.08.2020 மு.ப. |
| 39 | 41 | A.G.வனசுந்தரி | தென்சென்னை | 06.08.2020 மு.ப. |
| 40 | 42 | A.ஆதிகேசவன் | செங்கல்பட்டு | 10.08.2020 பி.ப. |
| 41 | 43 | P.ஆசீர் ஞான கிறிஸ்டோபர் | சேரன்மகாதேவி | 10.08.2020 மு.ப. |
| 42 | 44 | C.அந்தோணி லாரன்ஸ் | கோயம்புத்தூர் | 10.08.2020 பி.ப. |
| 43 | 45 | D.ருபினி | கோயம்புத்தூர் | 06.08.2020 பி.ப. |
| 44 | 46 | S.P.மகாலெட்சுமி | கோயம்புத்தூர் | 06.08.2020 மு.ப. |
| 45 | 47 | நா.ராகவேந்திரன் | விழுப்புரம் | 07.08.2020 பி.ப. |
| 46 | 48 | G.ஜெய்கணேஷ் | துணைப் பதிவுத்துறை தலைவர் அலுவலகம், கோயம்புத்தூர் | 10.08.2020 மு.ப. |
| 47 | 49 | T.ஆனந்தகுமார் | தென்சென்னை | 14.08.2020 மு.ப. |
| 48 | 50 | M.தமிழரசன் | துணைப் பதிவுத்துறை தலைவர் அலுவலகம், கோயம்புத்தூர் | 07.08.2020 மு.ப. |
| 49 | 51 | மு.ராஜ்குமார் | செங்கல்பட்டு | 17.08.2020 மு.ப. |
| 50 | 52 | S.மோகனபிரகாஷ் | உதகமண்டலம் | 10.08.2020 மு.ப. |
| 51 | 53 | V.புருஷோத்தமன் | செய்யாறு | 07.08.2020 மு.ப. |
| 52 | 54 | R.பிரியங்கா | தென்காசி | 06.08.2020 மு.ப. |
| 53 | 55 | K.ராகுல் | உதகமண்டலம் | 17.08.2020 மு.ப. |
| 54 | 56 | M.முத்துராஜா | தூத்துக்குடி | 07.08.2020 மு.ப. |
| 55 | 57 | வி.பிரபாகர் | கடலூர் | 03.08.2020 பி.ப. |
| 56 | 58 | K.சூரியா | திருநெல்வேலி | 14.08.2020 பி.ப. |
| 57 | 59 | V.செல்வபிரபு | உதகமண்டலம் | 12.08.2020 மு.ப. |
| 58 | 60 | M.மூர்த்திகுமார் | கும்பகோணம் | 07.08.2020 மு.ப. |

சார் பதிவாளர்
பல்லாவரம்